NEP/CO/GEN/02

2006.05.18

**சுற்றறிக்கை இல : 04/2006**

சகல கூட்டுறவுச் சங்கங்களினதும் தலைவர்களுக்கும்,
சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்,

**அறுபது வயதினை பூர்த்தி செய்த கூட்டுறவுச்சங்கப் பணியாளர்களை சேவையில் ஈடுபடுத்தல்**

---

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச்சட்ட ஒழுங்கு விதிகளின்படி அறுபது வயதினைப் பூர்த்தி செய்த பணியாளர்களைத் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இத்தகைய முறைப்பாடுகளில் அநேகமானவை பாரபட்சமான செயற்பாடுகளை வெளிப்படுத்துவதாகவும், அடுத்துள்ள நிலையில் சேவையாற்றுபவருக்கான பதவி உயர்வு தடைப்படுவதை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளன.

எனவே அறுபது வயதினைப் பூர்த்தி செய்த அனைத்து கூட்டுறவுச்சங்கப் பணியாளர்களையும் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச்சட்ட ஒழுங்கு விதிகளின் கீழான ஏற்பாடுகளுக்கமைய ஓய்வு பெறச்செய்தல் வேண்டும்.

ஓய்வு பெற்றபின் உச்சமட்ட அல்லது நடுநிலைமட்ட அல்லது தொழில்நுட்ப பணியாளர்களின் சேவையை நீடிக்க விருப்பின், அதற்கான விண்ணப்பத்தினை பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்து **எனக்கூடாக** கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1. சேவையில் ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கும் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு முன் விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

2. விண்ணப்பத்துடன் இயக்குனர்சபைத் தீர்மானம் உதவி ஆணையாளரின் சிபாரிசு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. கால நீடிப்பிற்காக அங்கீகரிக்கக் கூடிய காரணம் காட்டப்படல் வேண்டும். (இயக்குனர் சபைத் தீர்மானத்தில்)

4. உரிய பதவிக்கான அடிப்படைத் தகைமை பெற்று அடுத்துள்ள நிலையில் இருக்கும் பணியாளரின் பதவி உயர்வைப் பாதிக்காத நிலையிலேயே காலநீடிப்பு கோரப்படல் வேண்டும்.

5. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு அங்கீகரித்த விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

**இ.இளங்கோவன்,**
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்.(வகிமா)

பிரதி : செயலாளர், கூ.வே.ஆணைக்குழு - எனது சிபாரிசு அற்ற விண்ணப்பங்களை மீளளிப்பதற்காக.

-கிம.